497

Reg. No. M. 1534.

அறிவு ★ உழைப்பு

ஒழுக்கமே திறமை

சேசு நாதா சேச மாதா சூசை நாதா

R. C. Training School Magazine, Trichinopoly.

8 - SEP 1931

திருச்சினுப்பள்ளி
திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

போதனு விஷயப் பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்: வருஷ சந்தா ரூபாய் 1.

கொத்து 22	ஆகஸ்டு 1931	மலர் 2

JL
ஸ்வி, N11PD
A31.22.2.
182284

...திராதிபர் குறிப்புகள்

...க் கல்வி மந்திரி திவான் பகதூர் கனம் ...ர் அவர்கள் நமது போதனுமுறைப் பாட...த்தை ஜூலை மாதம் 13-ம் தேதி திறந்து

வைத்தபோது, இப்பாடசாலைத் தலைமையாசிரியரவர்கள் அன்னவருக்கு வாசித்துக் கொடுத்த உபசாரப் பத்திரத்தின் சுருக்கமாவது :—

"ஆரம்பக்கல்வியின் அபிவிருத்தியில் தங்களுக்குள்ள அவா, ஊக்கம், உழைப்பு இவற்றை நன்குணர்ந்துள்ள நாங்கள், அத்துறையில் அதே நோக்கத்துடன் உழைத்துவருகின்றதைத் தாங்கள் பார்த்தறிந்து மகிழ்ச்சியுறுவீர்கள் என்ற காரணத்தாலும், இப்புதுக் கட்டிடம் தங்களால் திறந்துவைக்கப்படும் பேற்றைப் பெறவேண்டுமென்ற கருத்தாலும், தங்களை வேண்டிக்கொண்டதற்கிசைந்து இவண் பிரசன்னமாயிருப்பதற்காக எங்களது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றனம்."

"கத்தோலிக்கு ஆசிரியர்களின் பயிற்சிக்காக 1907-ம் வருஷம் ஹையர் கிரேட் போதனுமுறைப் பாடசாலையாக ஸ்தாபிக்கப்பெற்று, இற்றைவரை சற்றேறக்குறைய 2000 ஆசிரியர்களைப் பயிற்றிவர, உயர்தர ஆசிரியர்களின் தேவை அதிகரித்துவருவதையுன்னி, ரூ. 23,000 மதிப்புள்ள இப் புதுக்கட்டிடம் செக்கண்டரி கிரேட் ஆசிரியர்களுக்காகத் தோன்றலாயிற்று. இதன் அஸ்திவாரத்தைத் திருச்சி மேற்றிராணியாராகிய சரி. வந். அகுஸ்தீன் பெசாந்தியர் ஆண்டவரவர்கள் சென்ற டிசம்பர் மாதம் மந்திரித்தருள, சுமார் ஆறு மாத காலத்திற்குள் இந்த மாடிக்கட்டிடம் புது மாணாக்கர்களை ஏற்றுக்கொள்ளத் தயாராகியிருக்கின்றது."

"ஒழுக்கமே அறிவு, உழைப்பே திறமை என்ற எங்களது பாடசாலை விருதுவாக்கியத்திற்கிணங்க, இதில் பயிலும் ஆசிரியர்களின் கல்வித்திறனை வளர்ப்பதுடன் அவர்களது ஒழுக்கப்பயிற்சியிலும் கண்ணுங்கருத்துமாயுள்ளோமென்பதையும் ஈண்டுக் குறிப்பிட்டு, தங்களுக்கு, எங்களது நன்றியறிதலை மற்றுமோர்முறை கூறி, புதுக்கட்டிடத்தைத் திறந்துவைக்குமாறு வேண்டுகின்றனம்."

கனம் மந்திரியவர்கள் இதற்குப் பதிலளிக்கையில், ஆசிரியர்களைப் பயிற்றவேண்டிய கடமை பெரிதும் துரைத்தனத்தாரைச் சார்ந்ததானாலும், ரோமன் கத்தோலிக்குக் குருமார்கள் போன்றவர்கள் எடுத்துக்கொள்ளும் பிரயாசைகள் சர்க்காருக்கு மிகுந்த உதவியை அளிக்கின்றனவென்றும், போதுமான திரவிய சகாயம் செய்ய நேரிடாவிடினும் மனப்பூர்வமாய் அவர்களுக்கு நன்றியறிந்திருக்கக் கடமைப்பட்டுள்ளார்கள் என்றும், பயிற்சிபெற்ற ஆசிரியர்களின் தொகை அதிகரிக்கவேண்டிய இக்காலத்தில் ரோமன்

182284

கத்தோலிக்குக் குருமார்களின் அரிய சேவையைத் தாம் பாராட்டுவதாயும், எனவே, புதுக்கட்டிடத் திறப்பு விழாவில் கலந்து கொள்ளுவதில் தமக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்படுவதாகக் கூறி, புதுக்கட்டிடத்தைத் திறந்துவைத்தனர்.

அவ்வமயம் நடந்தேறிய பற்பல விசேஷங்களைக் கேட்டறிய நமது பூர்வ மாணவர்க்கிருக்கக்கூடிய ஆவலைத் தீர்க்குமாறு தற்கால மாணவர்களிலொருவர் நமது அச்சுக்கூடத்திலிருந்து வெளிவரும் வேறொரு பத்திரிகைக்காக எழுதிய வியாசத்தை இங்கு பிரசுரிக்கிறோம்:

திருச்சி, திருக்குடும்ப செக்கண்டரி போதனுமுறைப் பாடசாலையின் திறப்பு வைபவம்

மதுரை மிஷன் கத்தோலிக்கு ஆசிரியரின் பயிற்சிக்காக 1907-ம் வருஷம் திருச்சிறுப்பள்ளியில் சேசுசபை சுவாமிமார்களால் துவக்கப்பட்ட போதனுமுறைப் பாடசாலையானது, இது காறும் ஏறக்குறைய 2000 ஆசிரியர்களை வெகு திறமையோடு தயாரித்திருக்கிறது யாவருக்கும் வெகு மகிழ்ச்சியைக் கொடுக்கக்கூடியதோர் விஷயம். இம்மிஷனில் உயர்தர ஆரம்பப் பாடசாலைகளின் தொகை அதிகரிக்க, ஸ்கூல் பைனல், இன்டெர்மீடியேட் பரீட்சை கொடுத்துப் போதனுமுறையில் பயின்ற உபாத்திமார்களின் தேவை அதிகரிக்கலாயிற்று. இக்குறையை நிவர்த்தி செய்ய, 1929-ம் வருஷம் இங்கு செக்கண்டரி கிரேட் துவக்கப்பெற்றது. ஆனால் இவ்வுயர்தரக் கல்வி பயிலும் ஆசிரியர்களுக்கென பிரத்தியேகமான கட்டிடங்கள் கட்டப்படாததினுல், முழுவதும் மிஷன் செலவில் ஆரம்ப ஆசிரியர்களுக்காகக் கட்டப்பட்டிருந்த பழைய கட்டிடத்திலேயே இவர்களுக்கும் கல்வி கற்பிக்கப்பட்டு வந்தது. ஆயினும், வெகு சீக்கிரம் பெரியோர்கள் முயற்சியால் ரூ. 23,100 மதிப்புள்ள ஓர் கட்டிடத்தைக் கட்டக் கவர்ன்மென்டார் சரிபாதித்தொகை கொடுப்பதாக வாக்களித்தனர். கட்டிடத்தின் அஸ்திவாரத்தை திருச்சி மேற்றிராணியாராகிய சரி. வந். அகுஸ்தீன் பெசாந்தியர் ஆண்டவரவர்கள் சென்ற டிசம்பர் மாதம் மந்திரித்தார்கள். ஜூலை மாதம் வரவிருந்த புதிய மாணவர்களை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்குமாறு கட்டிட வேலையும் வெகு துரிதமாய் நடைபெற்று ஜூலை மாதம் முதல் தேதி முடிவடைந்தது. 2-ம் தேதியன்று திருச்சி மேற்றிராணியார் ஆண்டவரவர்கள் கட்டிடத்தை வெகு ஆடம்பரத்தோடு மந்திரித்தார்கள். இம்மாதம் 13-ம் தேதியன்றே திறப்பு வைபவம் சென்னை இராஜதானிக் கல்வி இலாகா மந்திரியாகிய

திவான் பஹதூர் குமாரசுவாமி ரெட்டியார் அவர்களால் சிறப்பிக்கப்பட்டது.

இத்திறப்பு வைபவம் வெகு ஆடம்பரத்துடன் நடைபெற்றது யாவரும் எதிர்பார்த்ததோர் விஷயம். ஜூலை மாதம் 13-ம் தேதி, திங்கட்கிழமை காலை 8-30 மணிக்கு இப்பாடசாலை ஆசிரிய மாணவரும் மாடல் ஸ்கூல் பிள்ளைகளும் பழைய கட்டிடத்திலுள்ள பெரிய சபாமண்டபத்தில் கூடியிருந்தனர். பாடசாலை ஆசிரியர்களும் திறப்புவிழாவுக்கு அழைக்கப்பட்டிருந்த கனவான்கள் பலரும் தத்தம் ஆசனத்திலமர்ந்து மேன்மைதங்கிய மந்திரியவர்களின் வரவை ஆவலோடு எதிர்பார்த்துநின்றனர். சுமார் 9-30 மணிக்கு கனம் மந்திரியவர்கள் வந்து, சங். மானேஜர் சுவாமியவர்களால் வரவேற்கப்பட்டு, தமக்காக அமைக்கப்பட்டிருந்த ஆசனத்திலமர்ந்தார்கள். மாணவர்களில் சிறியோரும் பெரியோருமாக, ஆங்கிலத்திலும் தமிழிலும் சுபசோபன சங்கீதங்கள் இனிது பாடி, மந்திரிக்கும் வேறு சில கனவான்களுக்கும் பூமாலை சூட்டினர். பாடசாலையில் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டிருந்த வாலிபச்சாரணர் இயக்கத்தில் சிலரை மந்திரியவர்களின் முன்னிலையிலேயே சாரணத்தலைவர் வெகு சிறப்பாகச் சேர்த்தனர். பின்பு மானேஜர் சங். ஜே. எல். மிராந்த சுவாமியவர்கள் ஆங்கிலத்தில் ஓர் வந்தனோபசாரப்பத்திரம் வாசித்தனர். அதில் அவர் கூறியுள்ள விஷயமானது மந்திரியவர்களுக்கு மிக்க சந்தோஷத்தைக் கொடுத்தது. சென்ற 24 வருஷங்களாக இப்போதனுமுறைப் பாடசாலையானது ஒழுக்கமே அறிவு, உழைப்பே திறமை என்னும் விருதுவாக்கியத்தைக் கைக்கொண்டு ஏறக்குறைய 2000 மாணவரைப் பயிற்சித்துத் தென்னிந்தியாவிலுள்ள பற்பல ஆரம்பப் பாடசாலைகளில் நல்லாசிரியராக உழைக்க அனுப்பியிருக்கிறதென்றும், நாளாவட்டத்தில் இம்மிஷனில் ஆரம்பப்பாடசாலைகள் அதிகரிக்க செக்கண்டரி கிரேட் ஆரம்பிக்கப்பட்ட விதத்தையும் அதில் சுட்டிக்காட்டியிருந்தார். பின்பு மந்திரியவர்கள் ஆங்கிலத்தில் ஓர் சொற்பொழிவு செய்தார். தேசத்தின் முன்னேற்றத்திற்கு ஆரம்பப்பாடசாலைகள் மிக்க அவசியமான சாதனமென்றும், இப்பாடசாலைகளை நடத்தத் திறமைவாய்ந்த ஆசிரியர்களைக் கவர்ன்மென்ரூர் தங்கள் சொந்தச் செலவிலேயே தயாரிக்கவேண்டியதிருக்க, உரோமான் கத்தோலிக்குக் குருக்கள் இப்பரோபகாரத்தொழிலில் ஈடுபட்டு, பணவுதவிசெய்து உழைப்பதானது மிகவும் பாராட்டத்தக்கதெனவும், பாடசாலையில் தக்க இடவசதி இல்லாததினல் வருஷாவருஷம் வெகுபேரை ஏற்றுக்கொள்ள முடியாததைப் பற்றித் தாம் வருத்தப்படுவதாகவும் சொன்னார்.

மந்திரி தம்து சொற்பொழிவை முடித்தபின் ஆசிரியர், மாணவர், சுவாமிமார்கள், கனதனவான்கள் புடைசூழ புதிய கட்டிடத்திற்கேகி அதைத் திறந்துவைத்துவிட்டு, தமிழில் ஓர் சொற்பொழிவு செய்தார். அதில், திருநெல்வேலி ஜில்லாவாசிகளே இம்மாகாணத்தின் பல ஜில்லாக்களில் ஆசிரியராக இருப்பதுவும், இங்கும் அவர்களே அதிகமாக இருப்பதுவும், திருநெல்வேலி ஜில்லாவிலேயே பிறந்த தமக்கும் சங். மிராந்த சுவாமியவர்களுக்கும் மிகவும் சந்தோஷத்தைக் கொடுக்கிறதென்றும், ஆசிரிய மாணவர்கள் தங்கள் பயிற்சியில் நல்லொழுக்கப் பயிற்சியையே முதன்மையாகக் கொள்ளவேண்டுமெனவும் சொல்ல, இராஜ வாழ்த்துப் பாடி இவ்வைபவம் இனிது முடிவுபெற்றது.

மைசூரில் சுற்றுப் பிரயாணம்

பங்களூர்

மைசூர் ராஜ்யம் இந்தியாவிலுள்ள சுதேச ராஜ்யங்களில் ஒன்று. இது விஸ்தீரணத்தில் இந்தியாவிலுள்ள சுதேச ராஜ்யங்களில் மூன்ருவதாக இருந்தபோதிலும் செல்வ அபிவிர்த்தியிலும், தொழிலபிவிருத்தியிலும், கல்வியிலும் சுதேச இராஜ்யங்களில் முதன்மையாக விளங்குகின்றது. இதன் விஸ்தீரணம் 29,475 சதுர மைல். ஜனத்தொகை சற்றேறக்குறைய 65 லக்ஷம். அதாவது சதுர மைலுக்கு 220 ஜனங்கள் வீதம் வசிக்கின்ருர்கள். நமது ஜில்லாவின் ஜனநெருக்கம் சதுர மைலுக்கு 442 வீதமுள்ளது. ஆகவே மைசூர் ராஜ்யத்தின் ஜனநெருக்கம் நம் ஜில்லாவின் ஜனநெருக்கத்தில் பாதிதானிருக்கிறது. ஆயினும் இந்தியாவின் மற்ற பல பாகங்களைக் காட்டிலும் ஜனநெருக்கம் மைசூரில் அதிகமென்றே சொல்லவேண்டும்.

இது இவ்வாருக, இந்நாடு மற்ற நாடுகளைக்காட்டிலும் செல்வத்திலும், தொழிலிலும் விருத்தி யடைந்திருக்கக் காரணம் என்னவென்று கவனிப்போம்: இந்நாடு முழுவதும் கிழக்கு மலைத்தொடருக்கும் மேற்கு மலைத்தொடருக்கும் நடுவிலுள்ள முக்கோண வடிவமாயுள்ள பீடபூமி. இதன் பெரும்பாலான பாகம் 2500 அடிக்கு மேலுள்ளது. மேற்கு மலைத்தொடரின் சரிவுகளில் விலையுயர்ந்த சந்தனம், தேக்கு, புளி, பலா, முதலிய மரங்களடர்ந்த காடுகள் ஏற்பட்டுள்ளன. கிழக்குத் தொடர் மலையை அடுத்த பீடபூமிப் பிரதேசம் மிகவும் முக்கியமானது. ஏனெனில் இந்தியாவிலேயே முக்கியமான கோலார் தங்கச்

சுரங்கம் அங்கேயுள்ளது. மேலும் வடமேற்குப் பாகத்தில் இரும்பு சத்து அகப்படுகிறது. தென் மேற்கிலுள்ள சிவ சமுத்திர நீர் வீழ்ச்சி அதிக நன்மையைப் பயக்குகிறது. அந் நீர் வீழ்ச்சியின் உதவியால் மின்சார சக்தி தயார் செய்யப்பட்டு கோலார் தங்கச் சுரங்கத்தில் வேலைசெய்ய அனுப்பப்படுகிறது. ஆகையால் இந்நாட்டில், தங்கச் சுரங்கவேலை, இரும்பு உருக்குதல், சந்தணக் கட்டை கோப்பு செய்தல் முதலிய கைத்தொழில்கள் நடைபெறுகின்றன. மேலும் மேட்டுப் பிரதேசங்களான பல்லாரி, அனந்தபுரம், மைசூரின் வடகிழக்குப் பாகம் இவற்றில் உண்டாகும் பருத்தியைக்கொண்டு மைசூரில் பெரிய நெசவு சாலைகள் நடைபெறுகின்றன. மேலும் மைசூர், பட்டுநூலுக்கும் பட்டுநெசவுக்கும் பெயர்போனது. பெங்களூருக்கு அருகில் முசுக்கட்டை மரங்கள் பயிர்செய்து பட்டுப்பூச்சி வளர்க்கிறார்கள். ஆதலின் பட்டு நெசவு இவ்விடமதிகம். அன்றியும் பெங்களூர் உலகத்தின் அழகிய நகரங்களில் ஒன்றாகும். எனவே இதை நாம் பார்க்க வேண்டியதவசியம். அங்கும் மைசூரிலும் மஹாராஜாவினுடைய அரண்மனையும், பங்களாக்களும், கச்சேரிகளும், கண்ணைக்கவரக் கூடிய ரமணீகரமான தோட்டங்களும், மிகவும் நேர்த்தியானவை. இந்திய ரஸாயன ஆராய்ச்சிசாலை இவ்வூரிலேயே உள்ளது. கண்ணம்பாடி அணையும் மைசூர் ராஜா அரண்மனையும் மிகவும் அழகும் அற்புதமும் பொருந்தியவை. ஆதலின் மைசூர் ராஜ்யம் வருஷா வருஷம் பல நாட்டினராலும் வந்து பார்க்கப்படுகிறது. இவ்வித அற்புதங்களைக் காண யாவரும் ஆவலுள்ளவர்களாயிருப்பார்கள். அவைகளில் சிலவற்றைப் பார்க்க வேண்டிய ஆவலுள்ளவர்களாய் நானும் என்னுடைய சகாக்களும் மைசூரில் சுமார் ஒருவாரம் சுற்றுப்பிரயாணம் செய்தோம். அதில் நாங்கள் பார்த்ததில் முக்கியமானவை: பங்களூர் நகரம், கோலார் தங்கச் சுரங்கம், சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சியும், மின்சார உற்பத்திசாலையுமாம். அவற்றின் விவரம் பின்வருமாறு:—

பங்களூர்

இந்நகரம் உலகத்திலுள்ள அழகும் ஆரோக்கியமும் பொருந்திய நகரங்களில் ஒன்று. இதுதான் மைசூரில் மிகவும் பெரிய நகரம். அந்த ராஜ்யத்தின் கிழக்குப் பாகத்தில் அமைந்துள்ளது. இது சென்னைக்கு அநேகமாய் மேற்கே 216 மைல் தூரத்திலுள்ளது. சுமார் 7 மணிநேரத்தில் வேகமாய் போகிற ரயிலில் சென்னையிலிருந்து பங்களூருக்குப்போய் சேரலாம். சென்னையில் இரவு 11 மணிக்குக் கிளம்பினால் காலை 6 மணிக்கு பங்களூர் சேரலாம். இது சமுத்திர மட்டத்திற்குமேல் சுமார் 3000 அடி

உயரத்திலுள்ளது. இந்நகரம் பங்களூர் சிட்டி (City) என்றும் கண்டோன்மெண்டு (Cantonment) என்றும் இருபாகமாய்ப் பிரிக்கப்பட்டுள்ளது. மேற்கிலுள்ள "சிட்டி" சுதேச ராஜ்யத்திலுள்ளது. கீழ் பாகமான "கண்டோன்மெண்டு" நேராக பிரிட்டிஷ் ராஜாங்கத்துக்குட்பட்டது. மைசூர் ராஜ்யத்தின் ரெசிடெண்டு (Resident) இவ்விடம் வசிக்கிறார். இந்நகரங்கள் இரண்டும் அதிக நெருங்கி அமைந்துள்ளன. சிட்டியின் பழைய பாகம் அதிக நெரிசலானது. ஆனால் இப்போது ஏற்பட்டுள்ள பாகம் மிகவும் விசாலித்துள்ளது. பங்களூர் முழுவதுமே தோட்டத்திலுலானதென்று சொல்லவேண்டும். ரஸ்தாக்கள் வெகு நேர்த்தியாக வைக்கப்பட்டுள்ளன. ரஸ்தாக்களில் இரு கையிலும் மரங்கள் அழகாயமைந்துள்ளன. எங்கே பார்த்தாலும் மின்சார விளக்குகள் காணப்படும். நாற்சந்திகளில் கிளைக் கம்பங்கள் நேர்த்தியான மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டு நகரங்களும் சேர்ந்து கிழக்குமேற்கே 4 மைலும், தெற்குவடக்கே 4 மைலும் விஸ்தீரணமுள்ளது. இதில் முக்கியமாய்ப் பார்க்கக்கூடியவை: ராஜ அரண்மனை, ரெஸிடென்ஸி ஆபீஸ், கச்சேரிகள், கப்பன் பார்க்கு, லால் பாக் முதலிய சிங்காரத் தோப்புகள், சோப்புத் தொழிற்சாலை, பஞ்சு இயந்திர சாலைகள், குதிரைப் பந்தய மார்க்கம், இஞ்சனீரிங் கலாசாலை, காலேஜ், மார்க்கட்டு, டாட்டாவின் இந்திய ரசாயன ஆராய்ச்சிசாலை முதலியன.

இந்திய ரசாயன ஆராய்ச்சிசாலை

இது இந்த நகரின் வடகிழக்குப் பாகத்திலுள்ளது. இது விஸ்தாரமான இடத்தில் வெகு நேர்த்தியாகக் கட்டப்பட்டுள்ளது. இந்தியாவில் இவ்வளவு பெரிய ஆராய்ச்சிசாலை வேறெதுவுமில்லை. இந்தியாவின் தொழில் பொருள் இவற்றின் முன்னேற்றத்தின் பொருட்டு ஆராய்ச்சி மூலமாய் தொழிலபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் J. N. டாட்டா கொடுத்த 30 லட்சம் ரூபாயை முதலாகக்கொண்டு ஸ்தாபிக்கப்பட்டது. அப்போது திவானாயிருந்த ஸர். சேஷாத்திரி அய்யரவர்களின் உதவியினாலும் மகாராஜாவின் நன்கொடையினாலும் இடமும் கட்டடமும் ஏற்பட்டு இவ்வாராய்ச்சிசாலை அவ்வூரில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதை மேற்பார்வையிட 3500 ரூபாய் மாதச்சம்பளம் கொடுத்து ஒரு ஐரோப்பியரை நியமித்துள்ளார்கள். அவரின்கீழ் அநேகம் பேர் பல துறைகளிலும் ஆராய்ச்சி செய்துவருகிறார்கள். இக்கலாசாலையில் பல பிரிவுகளுண்டு. அவையாவன (1) ரசாயன சம்பந்

தமான பிரிவு (applied chemistry) ஜீவாணு சம்பந்தமான ரசாயன பிரிவு (Bio chemistry) பௌதீக சம்பந்தமான பிரிவு (applied physics and electro technology) இவை முக்கியமானவை. இவைதவிர முசுக்கட்டை மரம், பட்டுப் பூச்சி வளர்த்தல் முதலியவற்றைப்பற்றியும் பரிசீலனை செய்யப் படுகிறது. ரஸாயன சம்பந்தமான பிரிவில் நம் நாட்டிலுள்ள விதைகள் எல்லாவற்றிலிருந்தும் எண்ணெ இறக்கப்பட்டு அவை களைக்கொண்டு ரஸாயன சம்பந்தமான சாமான்கள் செய்யபபடு கின்றன. மஞ்சள், இஞ்சி, கடுகு, பருத்திக்கொட்டை, ஓமம் இவைகளின் சத்து தைலமாக இறக்கப்பட்டு வெகு காரமுள் ளவைகளாக காணப்பட்டன. அவைகளில் மஞ்சளிலிருந்து இறக்கப்பட்ட தைலத்தை நாங்கள் சற்று முகர்ந்து பார்த்தோம். அதன் காரம் எங்களால் தாங்கமுடியவில்லை. மேலும் நம் நாட்டு எண்ணெயாகிய தேங்காய் எண்ணெ வெண்ணெபோல் கனபதார்த் தமாய் செய்யப்படுவதையும் நாங்கள் பார்த்தோம். இவ்விதம் செய்த கட்டியான எண்ணெ சோப்பு செய்வதற்கு அதிக நயமாக வும் சௌகரியமாகவுமிருக்கிறதாம்.

அதன்பிறகு நாங்கள் ஜீவாணுசம்பந்த ரஸாயனப் பிரிவைப் பார்வையிட்டோம். அதில் பயிர் சம்பந்தமான ஜீவாணுக்கள் உண்டாகிப் பெருகும் விதம் பரிசீலனை செய்யப்படுகிறது. அதன் பிறகு நாங்கள் பௌதிக சம்பந்தமான பிரிவைப் பார்த்தோம். அதில் மின்சார சக்தி சம்பந்தமான ஆராய்ச்சி நடக்கிறது. அங்கு ஒரு கம்பியில்லாத் தந்திசாலையும் அமைக்கப்பட்டுள்ளது. இதற்குவேண்டிய சக்தி முழுவதும் மின்சாரசக்தியாக சிவசமுத் திரத்திலிருந்து கொண்டுவரப்படுகிறது. இக்கட்டடங்களின் ஒருபாகத்தில் 5 அடி அகலமும் 8 அடி உயரமுள்ள ஒரு குறுக லான பாதையின் வழியாய்ப் போகவேண்டியிருந்தது அப் பாதையின் கீழே அநேக மின்சாரக் கம்பிகள் போடப்பட்டு பலகையால் மூடப்பட்டிருந்தன. இருபக்கங்களிலும் தலைக்கு மேலுள்ள ஓட்டுக் கட்டிடத்திலும் அநேக கம்பிகள் போய்க் கொண்டிருந்தன. முக்கியமான இடங்களில் பெரிய எழுத்துக் களில் "அபாயம், ஜாக்கிரதை, உலோக சம்பந்தமான வஸ்து வைத் தொடக்கூடாது" என்று சிகப்பு வர்ணத்தில் எழுதிய பலகைகள் தொங்கிக்கொண்டிருந்தன. (கீழ், மேல், பக்கம் எங் கும் மின்சாரக் கம்பிகள் போய்க்கொண்டிருந்தன.) ஆகையால் அந்த குறுகலான இடத்தின் வழியாய்ப் போகும்போது நாங்கள் வெகு ஜாக்கிரதையாய் ஒடுங்கி, அடங்கிச் சென்றோம். அங்கே

சிவசமுத்திரத்திலிருந்து வரும் மின்சார சக்தியை சேர்த்து வைக்குமிடத்தையும், கம்பியில்லாத்தந்தி வேலைசெய்யும் மாதிரியையும் பார்த்தோம். சென்னையிலிருந்து வரும் சமாச்சாரம் கம்பியில்லாத் தந்திமூலமாய் கேட்டது.

இக்கட்டிடங்களுக்கு இடையில் ஆராய்ச்சிசாலை ஸ்தாபகரான டாட்டாவின் உருவச்சிலை ஒரு பெரிய மேடையின்மேல் வைக்கப்பட்டிருக்கிறது. இது (Bio chemistry) கட்டடத்தின் எதிரில் அமைக்கப்பட்டுள்ளது.

(தொடரும்)

M. Krishnamurthi Aiyar, BA, LT.
R. C. B. & Trng. School, Trichinopoly.

JL
MM211, M111PP
M37.22.2

சந்தாதார் பக்கம்

[இத்தலைப்பின்கீழ் சந்தாதார் கேட்கும் கேள்விகள், கேள்விகளுக்கு அவர்கள் சொல்லும் விடைகள், அவர்கள் எழுதும் கடிதங்கள், வியாசங்கள் முதலியவைகளைப் பிரசுரிப்போம். எழுதுபவர்கள் இதற்கென்று பிரத்தியேகமான காகிதத்தின் இடது பக்கம் கொஞ்சம் இடம்விட்டு காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாயும் சுருக்கமாயும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தாதாரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.]

ஆசிரியரின் குணங்கள்

வித்தியாப்பியாசம் என்பதை, மேதாவிகளிற் பலர் பலவிதமாகக் கோரினும், யாவரும் ஒருவாக்கொருமொழியாய் ஏற்றுக்கொள்ளும் விஷயம் யாதெனில்: தேகம், புத்தி, ஒழுக்கம் முதலியவைகளில் யாமடையும் விர்த்தியேயாம். ஆசிரியர் தம் மாணவர்களுக்கு இம்மூவிதக் கல்வியை ஊட்டவேண்டுமென்பதால், முந்த முந்த அவர்தாமே, மேற்கூறிய விஷயங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல்வேண்டும். தற்கால முறைப்படியே ஆசிரியர் தம் மாணவர்களைப் பயிற்சிக்கவேண்டும். சில ஆசிரியர், அநேக விஷயங்களை அறிவதும், அல்லது புத்தகங்களிலுள்ளவைகளை மனப்பாடஞ் செய்வதுமே கல்வி என்று எண்ணுகிறார்கள். இவர்கள் தம் மாணவர்களை ஏதோ ஓர் வெற்றுப் பாத்

ஆவணக் காப்பக நூலகம்
182284
சென்னை

திரமென்வும், அதை விஷயங்களால் நிரப்பவேண்டுமெனவும், கருதுகிறார்களேயன்றி அவர்கள் சரீரம் எவ்வித அந்தஸ்திலிருக்கிறது, என்ன விர்த்தியடைகின்றது, அவர்கள் ஞாபகம், புத்தி, மனது முதலிய தத்துவங்கள். எவ்வாறு ஒருமிக்கத் தேர்ச்சி பெறுகின்றன என்று கவனித்தல், தங்கள் தொழிலல்லவென்பதாக எண்ணக்கூடும். அப்படியல்ல. ஆசிரியரின் வேலை, பாரி வேலை. உலக முன்னேற்றமும், மனுமக்களின் ஆத்தும இரட்சணியமும் இவர் கையில் ஓர்விதத்தில் இருக்கிறதென்றே சொல்லலாம். ஆகையால் இப்பாரத்தைத் தாங்கும் ஆசிரியரே! நீவிர் சற்று உற்று யோசிக்கத்தகும் காரியங்கள் சிலவுண்டு.

நீவிர் வகுப்பு சென்று, சொற்பொழிவு செய்து திரும்பி வரல், அல்லது புத்தகத்தை வாசித்துவிட்டு திரும்பிவிடல், உண்மையான கல்வி புகட்டுதல் என்று எண்ணவேண்டாம். பிள்ளைகளை யோசிக்கச்செய்து, அவர்களே புதிய காரியங்களைக் கண்டுபிடிக்கும்படி செய்து இவ்விதமாக அவர்கள் மனோதத்துவங்களை விர்த்திசெய்வதே உமதுமேற் சுமந்த கடன். ஆகையால் நீவிர் தகுந்த தயார் செய்வது மகா அவசியம். குடும்பக் கவலை மற்றும் புறக்கவலை இருக்கிறதே, நான் என்ன செய்வேன் என்று சொல்லவேண்டாம். நீவிர் கொண்டுள்ள கடமையையும், கடவுள் உம்மிடம் கேட்கவிருக்கும் கடின கணக்கையும், சற்றே நினைவுகூர்ந்து, இத்தொழிலை உத்தமமாய்ச் செய்ய முன்வருவீராக. மேலும் இத்தொழிலில் அநுகூலமடைய விரும்பும் ஆசிரியரிடம் இயல்பாய் அமைந்திருக்கவேண்டிய குணங்களாவன :—

1. **நல்லொழுக்கச் சம்மந்தமாக:** பொறுமை, சாமர்த்தியம், பட்சம், மலர்ந்த முகம், பேச்சு நடத்தையில் மரியாதை, பிள்ளைகளின்மேல் அநுதாபம், தொழிலின்மேல் பிரீதி, நிலைமையான குணம், அதாவது: தீர்மானமும் உறுதியுமான மனது, தன்னையடக்குஞ்சக்தி, அதாவது தன் ஆசாபாசங்களையும் துர்க்குணங்களையும் அடக்குஞ்சக்தி, ஊக்கம், பிரயாசை, எதார்த்தம் முதலியன.

2. **புத்தி சம்மந்தமாக:** தாம் கற்பிக்கப்போகும் பாடங்களில் முழுதும் தேர்ச்சிவேண்டும். எதை? ஏன்? எப்படி? கற்பிக்கப்போகிறேன் என்னும் கேள்விகளுக்குத் தக்க பதில் தெரியவேண்டும். பிள்ளைகளிடம் உற்சாகமூட்டவும், கவனத்தை நிலைநாட்டவும் அறிவதோடு, உற்று நோக்குவதில் கூர்மையும் செய்கையில் தக்க துரிதமும் வேண்டும். தம் மாணக்கர் எவ்

விதக் குறையுடையோர் என்பதையறியவும், அவர்களை அடக்கியாளவுந் தெரியவேண்டும். சாமர்த்தியமாகச் சம்பாஷணை செய்யுந்திறமையும், விவரிக்குந்திறமையும் வேண்டும். அவர், தான் மென்மேலும் படித்துத் தன் புத்தியை விர்த்திசெய்யவேண்டுமென்னும் பேராவல் உடையவராய் இருத்தல்வேண்டும். மென்மேலும் கற்கவிருப்பமில்லா ஆசிரியர் வெகு சீக்கிரம் போதிக்குஞ் சக்தியை இழந்துவிடுவார் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். உண்மையில் நாமே இதைக் கண்கூடாகக் கண்டுமிருக்கலாம்.

3. **சரீர சௌக்கியம்:** அங்க வீனங்களில்லாமலிருத்தல் வேண்டும். நல்ல சௌக்கியமும், திடகாத்திரமுமுள்ள சரீரத்தை உடையவராய் இருத்தல்வேண்டும். கூர்மையான கண்களும், நுட்பமான செவிகளுமுடையவராய் இருக்கவேண்டும். சப்தம் போதிய அளவுவேண்டும். சிற்சில விளையாட்டுகளைக் கற்பிக்கத் திராணியும் வேண்டும்.

மேற்கூறிய குணங்கள் அமைந்துள்ள ஆசிரியர், தாம் உந்நத பதவியடைவதுமன்றி, தம்மிடம் பயிலும் மாணவர்களுக்கும் ஆத்தும சரீர நன்மைகள் பல செய்து, அவர்கள் இம்மையிலும் மறுமையிலும் உந்நதபதவியடையச் செய்வார் என்பது திண்ணம். இதுவே பெரியோரது எண்ணம்.

P. M. S.

கிண்டர் கார்ட்டன்

குழந்தைகளின் இயற்கையான குணங்களும் அதை விர்த்திசெய்யும் முறையும்

சிறுவர்களுக்குப் படித்துக்கொடுக்க நியமிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கிண்டர் கார்ட்டன் உபாத்தியாயரும் கல்வியைச் சிறுவர்களுக்கு நன்றாய்ப் பயிற்றிவிக்கவேண்டுமானால், கண்டனை தண்டனையால் பயமுறுத்திச் சரிவரப் படிக்கும்படி செய்யலாம் என்று நினைப்பது பிரயோஜனமற்ற காரியமாகும். இதைவிட்டுக் குழந்தைகளின் குணப்பான்மையை அனுசரித்து கிண்டர் கார்ட்டன் முறைப்படி விளையாட்டின் மூலமாயும் சிநேக வாஞ்சையோடும் கற்பித்தல் பிள்ளைகள் பிரயோஜனமடைய ஏற்ற வழியாகும். ஆனால் சிறுவர் எல்லோருக்கும் ஒரேமாதிரி குணங்கள் அமைந்திருப்பதுமில்லை. ஒவ்வொருவருடையவும் வித்தியாசமான குணங்களை அனுசரித்துப் பாடம் கற்பிப்பதும் சாத்தியமாகாது. ஆகை

யால் குழந்தைகளின் பொதுவான குணங்களை அறிந்து பாடம் நடத்தல் போதுமானது. குணங்களை அறிந்திருத்தல் மாத்திரம் போதாது; நாளாவட்டத்தில் அக்குணங்கள் விர்த்தியாகிக் கொண்டுவரக் கவனிக்கவேண்டும். ஆகையால் சிறுவர்களுக்கு பொதுவான குணங்களையும் அதை விர்த்தியாக்கும் வழியையும் இவண் எடுத்துரைப்பது நல்லதோர் காரியமாகும்:

1. குழந்தைகளுக்கு எப்போதும் ஏதாவது ஓர் தொழிலைச் செய்துகொண்டிருக்க விருப்பம் உண்டு.

2. உருவப்பொருள்களையமைக்கும் சக்தியுண்டு. மேற் கூறிய இரு குணங்களையும் களிமண் வேலையாலும், மணல் விளையாட்டினுலும், நூல் தைப்பதாலும், சித்திரம் எழுதுவதாலும், காகிதம் மடிப்பதாலும் விர்த்திசெய்யலாம்.

3. குழந்தைகளுக்கு ஏதாவது ஒன்றை அழிக்கும்படி விருப்பமுண்டு. இக்குணத்தைப் பிள்ளைகள் செய்த உருவங்களைக் கலைக்கச் செய்வதினுலேயே விர்த்திசெய்யலாம்.

4. யோசிக்கும் குணமுண்டு. இதைச் சம்பாஷணைப் பாடங்களாலும் பொருள், கணக்குப் பாடங்களாலும் அபிவிர்த்திக்குக்கொண்டு வரலாம்.

5. மனோ தர்ம அறிவுண்டு. இந்த அறிவைப் படங்களைப் பார்த்து சில விஷயங்களைச் சொல்லச்செய்வதாலும் கதை சொல்வதாலும் விர்த்திசெய்யலாம்.

6. குழந்தைகளுக்கு ஓடியாடி விளையாடவேண்டுமென்கிற ஆசையுண்டு. இவ்விருப்பத்தைத் தேகப்பயிற்சி செய்வதாலும் பல விளையாட்டுகளை விளையாடச்செய்வதாலும் நிறைவேற்றலாம்.

7. அழகான பொருட்களைக்கண்டு ஆசைப்படுவார்கள். இதை நாம் பலவித வர்ணமுள்ள ஜாமான்களை பாடம் நடத்தும் போது உபயோகிப்பதாலும், அழகான இயற்கைப்பொருள்களை உற்று நோக்கச் செய்வதாலும் நிறைவேற்றலாம்.

8. பிறர் நடிப்பதுபோல் நடிக்கும் ஆவல் உண்டு. இந்தக் குணத்தை அநேகம் கதைகளை நாடக ரூபமாகப் பிள்ளைகளைக் கொண்டே நடிக்கச்செய்வதால் விர்த்திசெய்யலாம். இப்படி நடிக்கச்செய்யும்போது குழந்தைகளை சந்தர்ப்பத்திற்கேற்றபடி மரங்களாகவும், மிருகங்களாகவும், பட்சிகளாகவும், ஆண்களாகவும், பெண்களாகவும் நியமித்துச் சரியாய் நடிக்கும்படி செய்ய வேண்டும்.

இவ்வாறு மேலே சொல்லப்பட்ட எட்டுக் குணங்களையும் உபாத்தியாயர் மனதில் வைத்துக்கொண்டு அவற்றை விர்த்தி செய்ய ஏற்ற பாடங்களை முஸ்திப்புச்செய்து பாடம் கற்பித்தால் குழந்தைகளின் சக்திகளும் ஆவல்களும் வீணே செல்லாமல் பிரயோஜனமான வழிகளில் சென்று நன்மை பயக்கும்.

A. M. S.

நன் மாணுக்கன்

நல்ல மாணுக்கன் அதிகாலையில் நித்திரைவிட்டெழும்புவான். அவன் கல்வியில் விருப்பமும், ஊக்கமும் உடையவனுயிருப்பான். வித்தியாசாலைக்கு ஒழுங்காகப் போவான். உபாத்தியாயரிடத்து அன்பும் பணிவும் உடையவனுய் அவருடைய சொல்லுக்கு அடங்கி நடப்பான். அவர் சொல்லும் பாடங்களை வேறு சிந்தனையின்றிக் கேட்டு, கேட்ட பாடங்களைப் பலதரஞ் சிந்தித்து, தனக்குச் சந்தேகமான பொருள்களைத் தன் வகுப்பு மாணுக்கர்களை வினவியறிவான். அவர்கள் சந்தேகமுற்று வினவியவைகளுக்குத் தான் உத்தரஞ் சொல்லுவான். அவர்களிடத்து அன்பும் சிநேகமும் உடையவனுயிருப்பான்.

அவன், தான் நோயாயிருக்கும் காலமும், தன் பிதா மாதா முதலிய பெரியோர்கள் முக்கிய கருமங்களுக்காகத் தடை செய்த காலமும் அல்லாத மற்றை எப்பொழுதாவது, பள்ளிக்கூடத்துக்குப் போகாமலிருக்கமாட்டான். போகாதபொழுதும், தான் வித்தியாசாலைக்கு வரமுடியாமைக்குக் காரணத்தைத் தன் உபாத்தியாயருக்குத் தெரிவித்து அவர் அநுமதி பெற்றுக்கொள்வான். வராத நாளிபன் ாடத்தைத் தவருமல் படித்து அதன் பொருளைக் கேட்டுத் தெரிந்துகொள்வான். தன் பாடத்தைக் கவனித்தலை விட்டுக் கெட்ட பிள்ளைகளுடைய வீண் பேச்சுக்களுக்கு ஒருபோதும் செவிகொடுக்கமாட்டான்; அவர்களோடுகூட வீண் விளையாட்டுக்களுக்குப் போகமாட்டான். ஒருவேளை தான் செய்யும் குற்றத்துக்காக உபாத்தியாயர் தன்னைத் தண்டித்தாராயினும், அவர் தன்மேல் வைத்த நேசத்தினுல் அதைச் செய்தார் என்று நினைத்து, தான் அவர்மேல் வைத்த அன்பை ஒருபோதும் மறக்கமாட்டான். ஒவ்வொரு வேளைகளில், தான் வாசிக்கும் பாடங்கள் கடினமாயிருந்தாலும், அதற்காகப் பயந்து, அவைகளைப் படிக்காமல் விட்டுவிடமாட்டான்; அவைகளை நாளுக்கு நாட் படித்துப் பொருள் தெரிந்துகொள்வான். பழைய பாடங்களை நாடோ

றும் சிறிதுசிறிதாகப் படித்துப் போற்றிக்கொள்ளுவான். இன்னும் கல்விக்குப் பயன் அறிவும், அறிவுக்குப் பயன் அறிந்தபடி நடத்தலுமே எனத் தெளிந்து, தான் படித்த பாடங்களிற் சொல்லியபடி நடக்கப் பழகிக்கொள்வான்.

இப்படி வித்தையை விரும்பிக் கற்பதும் நற்பழக்கமும் அவனை அகலாமல் இருக்கும்பொழுது அந்த நன்மாணுக்கனுக்கு வித்தியாசாலைக்குப் போகாமல் கழிக்கிற ஒருநாள் ஒருயுகம்போலக் கவலைக்கிடமாய்க் கழியும். இந்த நன்மாணுக்கன், கல்வியையும் அதன் பயனாகிய அறிவையும் அவ்வறிவின் பயனாகிய ஒழுக்கத்தையும் உடையவனாய், அறிவுடையோர்களால் நன்கு மதிக்கப்பட்டுப், பொருளையும் புகழையும் இன்பத்தையும் அடைகிறான்.

கல்வியை விரும்பிக் கற்கும் மாணுக்கர்கள் இந்த நல்ல மாணுக்கனைப்போலப் பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காகப் போய், உபாத்தியாயருடைய சொல்லுக்கு அடங்கி நடந்து பாலிய வயதிலேயே கல்வியை அவமதியாது கற்றுக்கொள்ளக்கடவார்கள். "சிறுமையிற் கல்வி சிலையிலெழுத்து" "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சைபுகினும் கற்கை நன்றே" "கேடில் விழுச்செல்வம் கல்வி" "அறிவுடையொருவனை அரசனும் விரும்பும்" என்னும் பெரியோர் வாக்குகளை மாணுக்கர்கள் எப்பொழுதும் சிந்தித்தல் வேண்டும்.

R. தோமாஸ்,
லேபர் ஸ்கூல் ஹெட்மாஸ்டர்,
கிடாரக்குளம் post நெட்டூர்,
தென்காசி தாலூகா.

பொய் புகலேல்

பெறுவதற்கு அரிய இம்மானிட உடலைப்பெற்ற நமக்கு கடவுள் வாயை அளித்திருப்பது உண்மை பேசுவதற்கே. பொய் பேசுவது கடவுளுக்கு ஆகாது. அவருடைய பிள்ளைகளாகிய நாம் நம் தந்தைக்கு ஒவ்வாத காரியம் செய்யலாமோ? மேலும் பொய் என்பது மனிதர் இயற்கைக்கு மாறுனதாகும். பொய் இன்னதென்று அறியாத சுமார் ஆறு ஏழு வயதுள்ள ஒரு பாலகனை அவனுடைய பிதா பார்த்து "மைந்த! என்னை ஒருவர் தேடிக்கொண்டு வருகிறார். அவர் வந்தால், 'அப்பா வீட்டில் இல்லை' என்று சொல்" என்று சொல்லிக்கொடுத்துவிட்டு வீட்டிற்குள் சென்றார். தேடிவந்தவரும் வீட்டினுள் நுழைந்தார். உள்ளே இருந்த அப்பையனைப் பார்த்து, "அப்பா! உன் தகப்ப

னார் எங்கே?" என்று கேட்டார். அதற்கு அப்பையன், "ஐயா, அப்பா வீட்டில் இல்லை என்று சொல்லச் சொன்னார்" என்று பதில் கூறினானாம். சகோதரர்களே! இப்பையன் இவ்வாறு சொன்னதற்குக் காரணம் என்ன? உலகானுபவம் இல்லாததினாலன்றோ! இவ்வுதாரணத்தினாலேயே உண்மை இயற்கையே; பொய் செயற்கையே என்று தெரிகிறது.

இப்பொழுது பொய்யினால் வரும் கெடுதிகளை சற்றுக் கூறுவோம். கூட்டு வியாபாரிகளை எடுத்துக்கொள்வோம். அவர்களுக்குள் உண்மை இருந்தால்தான் அவர்கள் வியாபாரம் நெடுநாள் நிலைபெற்றிருக்கும். அவ்வாறின்றி அவரவர்களைப் பொய் சொல்லி ஏமாற்றி வந்தலாபத்தை மறைக்க முயல்வார்களானால் அவர்களுக்குள் சச்சரவு உண்டாகி அதிசீக்கிரத்தில் அவர்கள் வியாபாரம் க்ஷீணதசை அடையும். ஆதலால் கூட்டு வியாபாரத்தில் பொய் கூடாது. பொய் பேசுவது பேசுகிறவனுக்கு அந்தச் சமயத்தில் சந்தோஷத்தை உண்டுபண்ணினாலுங்கூட, உண்மை வெளிப்படும் காலத்தில் தான் முன் சொல்லிய பொய்யை மறைக்க இன்னும் அனேக பொய் சொல்லவேண்டியிருக்கிறது. அதனுடன் நிற்காமல் அவனுடைய பெருமையைக் குலைத்து தாழ்வு படுத்துகிறது. பொய் பேசிப் பழகிவிட்டதினால் அவன் பின்பு ஒருக்காலும் உண்மை உரைக்கத் திறமையற்றவனாயும் பொய் பேசுவதைத் தவிர்க்கக்கூடாதவனாயும் ஆகிறான். கண்டவர்கள் அவனைப் பார்க்கும்போதெல்லாம், "சீ! அவன் பொய்யன்; அவனுடைய பேச்சை ஒருபோதும் நம்பக்கூடாது. அவன் வாயில் வருவதெல்லாம் பொய்" என்று பழித்துப் பேசுவார்கள். தான் சொல்வது "பொய்யோ! அல்லது மெய்யோ?" என்று தனக்கே தெரியாத நிலைமைக்கும் வந்துவிடுவான்.

சகோதரர்களே! பொய் பேசுவதினாலன்றோ வீடுகளின் பண்டையப் பெருமை குன்றுகிறது; முன்னோர்களுடைய மாண்பு தாழ்வுறுகிறது. இப்பாரத நாட்டிலே வளர்ந்து முன்னுக்கு வந்த நாம் நம் நாட்டின் தாழ்வுக்கு நாமே காரணமாக இருக்கலாமோ? இனிமேலாயினும் நீங்கள் பொய் பேசாதபடி கவனமாய் இருக்கவேண்டுமென்பது மாத்திரமேயல்ல; பொய் என்னும் அத்தீய பேயை உங்கள் அருகிலேயே அண்டவிடக் கூடாது என்றும் அறிவுமிகுந்த ஆசிரியர்களை அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

D. Sebastian,
ஹெட்மாஸ்டர்,
போர்டு ஸ்கூல், முத்தூர்

யோசனைக் கணக்குகள்

1. ஒரு தகப்பனுக்கு மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களில் மூத்தவனுக்கு 5 வருஷத்துக்கு முன்னால் தகப்பனுருடைய வயதில் $\frac{1}{3}$ பாகம். 2-வது மகனுக்கு 2 வருஷத்துக்கு முன்னால் தகப்பனுருடைய வயதில் $\frac{1}{3}$ பாகம். 3-வது மகனுக்கு ஒரு வருஷத்துக்கு முன்னால் தகப்பனுருடைய வயதில் $\frac{1}{4}$ பாகம். இப்போது மூன்று பிள்ளைகளுடைய வயதும் தகப்பனுருடைய வயதும் சரியாயிருக்கிறதென்றால் தகப்பனுருடைய வயதென்ன? ஒவ்வொரு பிள்ளையினுடைய வயதென்ன?

2. ஒரு இராஜா தன் மகன் கலியாணத்துக்காக அநேக இராஜ குடும்பங்களுக்கு அறிக்கை அனுப்பினார். அன்று மழை பெய்தமையால் அறிக்கை அனுப்பினவர்களில் $\frac{1}{4}$ பாகம் வந்தார்கள். அப்படி வந்தாலும் சமைத்த சாதம் பற்றாததால் ஒரு குடும்பத்துக்குக் கொடுக்கவேண்டியதை 2 குடும்பத்திற்குக் கொடுத்தார்கள். அப்படிக் கொடுத்ததால் சமைத்ததில் $\frac{1}{3}$ மீதி இருந்தது. அப்படியானால் அறிக்கை அனுப்பினது எத்தனை பேருக்கு? வந்தது எத்தனை பேர்? முதலில் சமைத்தது எத்தனை பேருக்கு?

M. Selvanayagam.

3L
on241, N11PP
N8- 2212
182284
சென்னை-600 008

PERMISSU SUPERIORUM
St. Joseph's Industrial School Press, Trichinopoly.—1931